**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி**: 26.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-4 |
| **சாட்சியின் பெயர்** | : | பிரவீன்குமார் |
| **தந்தை பெயர்** | : | ராஜேந்திரன் |
| **கிராமம்** | : | நாரணமங்கலம்,<br>ஆற்றங்கரைதெரு |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | ரியல் எஸ்டேட் |
| **வயது** | : | 31 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை

சேர்ந்தவன். அ.சா-1 தியாகராஜனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் என்ன சமூகத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. கடந்த 19.05.2023 ஆம் தேதி நாரணமங்கலம் ஆற்றங்கரைத்தெரு அருகாமையில் செந்தில் என்பவருக்கு சொந்தமான இடத்தில் அ.சா-1 தியாகராஜன் கூலிக்கு கல் அருத்துகொண்டு இருந்தார். காளாவின் உரிமையாளர் செந்தில்குமார் என்வரிடம் மழை பெய்ததால் கல் அருவை செய்யமுடிய வில்லை என்று கூறி எதிரியிடம் பணம் கேட்டார். அப்போது எதிரி நீ பணம் கொடுக்கவேண்டியது நிலைய இருக்கு நீ என் காளாவிற்கு வா என்று கூறினார். அதன் படி அ.சா-1 தியாகராஜன் அங்கு சென்றார். அப்போது பெரும்பனையூர் சேர்ந்த மணி என்பவர் எதிரியுடன் நின்று கொண்டு இருந்தார். அப்போது அ.சா-1 தியாகராஜன் எதிரியிடம் பணம் கேட்டபோது எதிரி சாவியை கொடுத்து அ.சா-1 ஐ காளாவின் கேட்டை திறக்கும் படி கூறினார். அ.சா-1 கேட்டை திறக்க மறுத்துவிட்டார். அப்போது எதிரி காளாவின் அருகில் நின்றுகொண்டிருந்து காரில் இருந்து அருவாளை எடுத்துகொண்டு அ.சா-1 ஐ பார்த்து பற குச்சிகாரி மகனே, பற தேவடியா மகனே என்று திட்டி என் காரை மறைத்து என்னிடமே பணம் கேட்கிறாயா என்று அருவாளை எடுத்து அ.சா-1யை நோக்கி அருவாளை விசினார். அ.சா-1 பயந்து கொண்டு கீழே குனிந்து கொண்டார். அதன் பின்னர் அ.சா-1 பயந்துகொண்டு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க ஓடிவிட்டார். இது தொடர்பாக நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள் நடந்த விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா-1 தியாகராஜன், அ.சா-2 திருமாறன் மற்றும் அ.சா-3 சுஜய்காந்த் ஆகியோர் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா-1 தியாகராஜன் என்பவர் எதிரி செந்திலிடம் ரூ.1000/- கேட்டார் என்ற விவரம் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா-1 தியாகராஜனை எதிரி சாவியை கொடுத்து கேட்டை திறக்கும் படி

கூறினார் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் கூறினேன். எதிரியின் காளாவில் நின்றுகொண்டிருந்த காரின் பதிவென் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது எந்த மாரி காரின் பெயர் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அருவாளை காரில் இருந்து எடுத்தாக எந்த பகுதியில் இருந்து எடுத்தாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் மீது குடவாசல் காவல் நிலையத்தில் தாமரைசெல்வன் என்பவரின் மனைவியை தாக்கியதற்காக குற்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான். எதிரியின் பெரியப்பா குடும்பத்திற்கும் எதிரிக்கு சொத்து பிரச்சனை இருந்தது எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் பெரியப்பா குடும்பத்திற்கும் எங்கள் கிராமத்திற்கும் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் எதிரியின் பெரியப்பா குடும்பத்திற்கு ஆதரவாக பஞ்சாயத்திற்கு நானும் சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலேயே நான் கிடையாது என்றாலும் சரியல்ல. அ.சா-1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.08.26 18:24:37 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.

**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 26.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-5 |
| **சாட்சியின் பெயர்** | : | மூவேந்தன் |
| **தந்தை பெயர்** | : | கோவிந்தன் |
| **கிராமம்** | : | நாரணமங்கலம்,<br>ஆற்றங்கரைதெரு |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | ஓட்டுனர் |
| **வயது** | : | 24 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனர் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவன். அ.சா-1 தியாகராஜனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பிள்ளை சமூகத்தை சேர்ந்தவர். கடந்த 03.06.2023 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி அளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த இளங்கேவன் செந்தில் காளவாய் அருகே நின்று கொண்டு இருந்தோம். அப்போது நன்னிலம் துணை காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடமான செந்தில் காளவாய்கு வந்தார். அப்போது துணை காவல் கண்காணிப்பாளர் சாதி பிரச்சனை சம்மந்தமாக அ.சா-1 தியாகராஜன் கொடுத்த புகாரை விசாரித்தார். விவரம் சொன்னேன். பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன். என்னிடம்

காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள் சம்பவம் பற்றி சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

அ.சா-1 தியாகராஜன், அ.சா-2 திருமாறன் மற்றும் அ.சா-3 சுஜய்காந்த், அ.சா-4 பிரவீன்குமார் ஆகியோர் ஒரே சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் அந்த இடத்தில் சண்டை நடைபெற்றது என்பது எழுதப்பட்டிருந்தது. அ.சா-ஆ -2 ஆன மகஜரில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா-2 திருமாறன்,என் தகப்பனார் மற்றும் நானும் சேர்ந்து குடவாசல் அரசு மருத்துவமணையில் மருத்துவரை தாக்கியதாக வழக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் மீது எந்த வழக்கும் இல்லை. நான் சம்பவ இடத்தில் கையெப்பம் செய்யவில்லை என்றும் அ.சா-1 கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.08.26 18:24:45 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.

**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன்**

**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 26.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-6 |
| **சாட்சியின் பெயர்** | : | இளங்கோவன் |
| **தந்தை பெயர்** | : | கோவிந்தராஜ் |
| **கிராமம்** | : | நாரணமங்கலம்,<br>ஆற்றங்கரைதெரு |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 50 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவன். அ.சா-1 தியாகராஜனை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பிள்ளை சமூகத்தை சேர்ந்தவர். கடந்த 03.06.2023 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி அளவில் நாரணமங்கலம் நன்னிலம் துணை காவல் கண்காணிப்பாளர் வந்தார். செந்தில் காளவாய் அருகே நானும் அ.சா-5 மூவேந்தன் ஆகியோர் நின்று கொண்டு இருந்தோம். துணை காவல் கண்காணிப்பாளர் எதிரி செந்தில்குமார் அ.சா-1 தியாகராஜன் மீது அருவாள் எடுத்து வீசியது சம்மந்தமாக சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார். விவரம் சொன்னேன். பார்வை மகஜர் தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் போட்டு

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ-2 ஆன பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தார்கள் சம்பவம் பற்றி சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

அ.சா-1 தியாகராஜன், அ.சா-2 திருமாறன் மற்றும் அ.சா-3 சுஜய்காந்த், அ.சா-4 பிரவீன்குமார், அ.சா-5 மூவேந்தன் ஆகியோர் ஒரே சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் நாரணமங்கலம் அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ சம்மயத்தில் நான் அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா-1 என் ஊர்காரர் மற்றும் சாதிகாரர் என்று அவருக்கு ஆதரவாக அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.08.26 18:24:52 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.